செய்தி வெளியீடு எண் : 2343 நாள் : 24.11.2023

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் இன்று (24.11.2023) சென்னை, I.I.T. வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 'ஸ்டார்ட் அப் தமிழா' என்ற தொலைக்காட்சி ரியாலிட்டி ஷோ நிகழ்ச்சியை அறிமுகம் செய்து வைத்து ஆற்றிய உரை.

இந்தியாவின் மக்கள் தொகையில் 6 சதவீதத்தை கொண்டது நமது தமிழ்நாடு, இந்திய அளவில் உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 2–ஆம் இடத்திலும், உற்பத்தி ஏற்றுமதியில், இந்தியாவிலேயே 3–வது பெரிய மாநிலமாக உள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மதிப்பீடும் போது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் – **GDP 9** சதவிகித பங்களிப்பை தமிழ்நாடு அளிக்கின்றது. இந்த பொருளாதார வளர்ச்சிக்கு MSME நிறுவனங்கள் **50** சதவிகித பங்களிப்பை வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தி, புதிய தொழில்முனைவோர்களை உருவாக்கி அதிக வேலைவாய்பை வழங்குவதில் **MSME** துறை முனைப்புடன் செயல்படுகிறது. **MSME** நிறுவனங்களுக்கு அடித்தளமாக விளங்குவது ஸ்டார்ட் அப் நிறுவனங்கள். தமிழ்நாட்டில் உள்ள ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு தகுந்த சூழலை அமைத்து, தொழில் துறையில், உலகின் தலைசிறந்த இடமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் **Start Up –**தமிழ்நாடு என்ற இயக்கத்திற்கு புத்துயிர் அளித்து வருகிறார். **Start Up** நிறுவனங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் **Start Up –TN** இயக்கத்திற்கு என முதன்மை செயல் அலுவலர் **CEO** பதவியை உருவாக்கி அவரது தலைமையில், **40** மேற்பட்ட பணியாளர்கள் நியமித்து, **Start Up –TN** இயக்கத்தை உருவாக்கி உள்ளார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் புத்தொழில் நிறுவனங்களுக்கு என இதுவரை இல்லாத வகையில் பல சிறப்பு திட்டங்களை கொண்ட **Start–Up** கொள்கையை கடந்த செப்டம்பர் மாதம் வெளியிட்டார். தமிழ்நாட்டில் **2021 –** மார்ச் வரை சுமார் **2,300 Startup** நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியால் தற்போது இந்த எண்ணிக்கை **7,400** க்கும் மேல் உயர்ந்துள்ளது. சென்னையை சார்ந்த **Start–Up** நிறுவனங்கள் கடந்த ஆண்டு **1.5** பில்லியன் டாலர் முதலீடுகளை ஈர்த்துள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் முன் மாதிரியான திட்டங்களால், **Start–Up** தர வரிசையில் இந்திய அளவில் கடைசி இடத்திலிருந்த தமிழ்நாடு, **3–**ஆம் நிலைக்கு முன்னேறி "லீடர்" தகுதியை பெற்றுள்ளது.

இளைஞர்கள் தொழில்முனைவோர்களாக உருவாக வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், குடும்ப சூழலாலும், போதிய விழிப்புணர்வு இல்லாததும் அவர்கள் தொழில் தொடங்க தடையாக உள்ளது. இளைஞர்களுக்கு போதிய விழிப்புணர்வு அளித்திடவும், ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு உலகளாவிய முதலீட்டாளர்களை ஈர்க்கவும், ஒரு புதிய முயற்சியாக, 'ஸ்டார்ட் அப் தமிழா' என்ற தொலைக்காட்சி ரியாலிட்டி ஷோ ஒலிபரப்பப்பட உள்ளது. ஸ்டார்ட் அப் தமிழா நிகழ்ச்சியானது சீசன் **1, 2, 3** என **3** கட்டங்களாக நடத்தப்பட உள்ளது. ஒரு சீசனுக்கு **12** எபிசோடுகள் என **36** எபிசோடுகள் ஒளிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் பங்கு பெற விரும்பும் புத்தொழில் முனைவோர்களை தேர்ந்தெடுக்க தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் விரைவில்

நேர்காணல்கள் நடத்தப்பட உள்ளன. எனவே, தமிழ்நாட்டில் உள்ள புதிய கண்டுபிடிப்பாளர்கள், புத்தொழில் முனைவோர்கள், ஸ்டார் அப் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் தொழிலதிபர்கள், இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

கழக அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் **Start-Up** – நிறுவனங்களை உருவாக்க, புத்தொழில் முனைவோர்களுக்கு ஆதார நிதி வழங்கும் **(TANSEED)** திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டு 50 புத்தொழில் நிறுவனங்களுக்கு தலா ரூ.10 லட்சம் வழங்க ரூ. 5 கோடி நிதியும், 2022-2023 ஆண்டு இந்த நிதியை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் உயர்த்தி 100 புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 10 கோடி நிதி ஒதுக்கி உத்தரவிட்டார்கள். இந்த ஆதார நிதியானது, பசுமை தொழில்நுட்பம் மகளிர் **Start-Up** நிறுவனங்கள், தொழிலாளர்கள் நகர்புறங்களுக்கு புலம் பெயர்வதை தடுக்க உதவும் **Start-Up** நிறுவனங்களுக்கு, ரூ. 10 லட்சத்திலிருந்து ரூ. 15 லட்சமாக உயர்த்தி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதுவரை132 **Start-Up** நிறுவனங்களுக்கு, ரூ.13 கோடியே 95 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் அனைத்து பிரிவுகளில் இருந்தும், தொழில்முனைவோர்கள் உருவாக வேண்டும் என்ற நல்ல நோக்கில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2022-2023 நிதி ஆண்டில் **SC/ST** ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு, ரூ. 30 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தார்கள். இந்த நிதி, நடப்பு ஆண்டு, 2023-2024 ல், ரூ. 50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை 21 **SC/ST** தொழில்முனைவோர்க்கு ரூ. 28 கோடியே 10 லட்சம் நிதியுதவியை பங்கு முதலீடாக அரசு வழங்கியுள்ளது. ஆக மொத்தம், கழக அரசு பொறுப்பேற்று இதுவரை 153 **Start-Up** நிறுவனங்களுக்கு, ரூ.42 கோடியே 5 லட்சம் கழக அரசு நிதியுதவி வழங்கியுள்ளது என பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்டார் அப் நிறுவனங்களின் தயாரிப்புகளை அரசு துறை பொது துறை நிறுவனங்கள் ஒப்பந்தபுள்ளி கோராமல், ரூ. 50 லட்சம் வரை நேரடி கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டு, கல்வி, வேளாண்மை, நீர் மேலாண்மை ஆகிய துறைகள் ரூ.36 லட்சம் மதிப்பில் ஸ்டார் அப் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரு நகரங்களில் மட்டும் இல்லாமல், தமிழ்நாடு முழுவதும் புத்தொழில் நிறுவனங்களை வளர்த்தெடுக்கவும், அவர்களுக்கு உரிய ஆலோசனைகள் உதவிகள் வழங்கவும், 2022-23 ஆம் ஆண்டு மதுரை, ஈரோடு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் வட்டார புத்தொழில் மையங்கள் நிறுவப்பட்டன. நடப்பு ஆண்டு 2023-24 ல் சேலம், ஓசூர், கடலூர் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் இந்த மையங்கள் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இளம் தொழில்முனைவோர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தொழில் தொடங்குவதற்கான ஆர்வத்தை கொண்டு வரவும், ஸ்டார்ட் அப் TN இயக்கமானது பல புதிய முன்னெடுப்புகளை செய்து வருகிறது. கடந்த 2 ஆண்டுகளில் தடை அதை உடை, ஆடுகளம், ஹேக்கத்தான் போட்டிகள் என 415 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

மாணவர்கள் – இளைஞர்கள் படிக்கும் காலத்திலேயே தொழில் முனைவோர்களாக உருவாக பள்ளி – கல்லூரிகளில் தொழில்முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம், தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டம் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ஆட்சி பொறுப்பேற்று, இது வரை 8 லட்சத்து 98 ஆயிரத்து 812 இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன். கடந்த 2 ஆண்டுகளில்,

266 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ. 7 கோடியே 39 லட்சம் நிதி உதவி வழங்கி ஊக்கப்படுத்தி உள்ளது. மேலும், கல்லூரி மாணவர்களை இளம் தொழில்முனைவோர்களாக வளர்த்தெடுக்க 101 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தொழில் வளர் காப்பகங்கள் –**Incubation Centres** அமைக்கப்பட்டு உள்ளது. இதில் 29 இன்குபேஷன் சென்ட்டர்களை ரூ. 19 கோடியே 84 லட்சம் மதிப்பீட்டில், புதிய இயந்திரங்கள் பரிசோதனை கூடங்கள் நிறுவப்பட்டு மேம்படுத்தப்பட்டு உள்ளன. அரசின் இன்குபேஷன் சென்ட்டர்களை பயன்படுத்தி 89 மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் புதிய கண்டுபிடிப்புகளை தயாரித்து பலன் அடைந்துள்ளனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் 2030–ல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் இலக்கினை அடைவதற்கு தொழில் துறை, MSME துறையுடன், ஸ்டார்ட் அப் நிறுவனங்களும் ஒரு குறிப்பிட்ட பங்கினை அளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டு, தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சீரிய பல திட்டங்களை பயன்படுத்தி, தமிழகத்தை தொழில் துறையில் முதன்மை மாநிலமாக கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் **MSME** அரசு செயலர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், I.A.S., **Start–Up TN – CEO** சிவராஜா ராமநாதன், Refex நிறுவன தலைவர் தினேஷ்குமார் அகர்வால், பான்–டெக் நிறுவன தலைவர் பிரோம் குமார், நேட்டீவ் லீட் CEO சுப்ரமணியம், தைரோ கேர் நிறுவன தலைவர் ஆரோக்கியசாமி வேலுமணி, புளூ காய் நிறுவன தலைவர் திரு. பாலசந்தர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in